

திருநெல்வேலி பாளையங்கோட்டை ஹைகிரவுண்ட் எம்.ஓ.சி வளாகத்தில் நேற்று (11/05/2025) ஞாயிற்றுகிழமை, உள்ள காயிதே மில்லத் ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் எஸ்.எஸ். மீரான் அவர்களின் இல்லத் திருமண விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு,மண மக்கள் அப்ராஹ் புகாரி ஆகியோருக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளரும்,சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்துல் வஹாப், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான்,நெல்லை மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், தூத்துக் குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி,முன்னாள் நெல்லை மேயர் சரவணன்,மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அனைவரையும் ஒன்று போல் கருதி

# அன்புடன் சிகிச்சை தரும் செவிலியர்களுக்கு வாழ்த்துக்கள்!

## உலக செவிலியர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துக்கள்!

சென்னை, மே 13 -

அனைவரையும் ஒன்று போல் கருதி அன்புடன் சிகிச்சை தரும் செவிலியர்கள் அனைவர்க்கும் நல்வாழ்த்துக்கள் என்று உலக செவிலியர் தினத்தை யொட்டி வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உலக செவிலியர் நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**தன் எதிரில் உள்ள மனிதரின் பாலினம், சமூகத் தகுதி, சாதி - மதம் - நிறம் என எதைப் பற்றியும் சிந்திக்காமல் அனைவரையும் ஒன்றுபோலக் கருதி, அன்புடன் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும் தூய உள்ளங்களான செவிலியர்கள் அனைவருக்கும் உலக செவிலியர் நாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க வசதியாக

# மாற்றுத்திறனாளி மாணவனுக்கு ரூ.2லட்சத்தில் சைக்கிள்!

## என்.சுரேஷ்ராஜன் வழங்கினார்!

நாகர்கோவில் மே 13–

சிறப்பு ஒலிம்பிக் சைக்கிள் போட்டியில் மாநில அளவில் முதல் பரிசு பெற்ற சிறப்பு மாணவன் (மாற்று திறனாளி), தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொள்வதற்கு வசதியாக இரண்டு லட்ச ரூபாய் மதிப்பிலான சைக்கிளை தமிழ்நாடு உணவு ஆணைய தலைவர் என்.சுரேஷ் ராஜன் வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிப்பள்ளம், அனந்தன்நகர் பகுதியை சேர்ந்தவர் மாற்று திறனாளி மாணவன் ஜெபின் தாமஸ். மாணவன் ஜெபின் தாமஸ் ராஜாக்கமங்கலம் அருகே பருத்தி விளையில் உள்ள சாந்தி நிலையம் மாற்றுத்திறனாளி பள்ளியில் பயின்று வருகிறான்.

மாணவன் ஜெபின் தாமஸ் மாநில அளவிலான போட்டியில் கலந்து முதல் பரிசு வெற்றி பெற்றார்.

மாணவன் தேசிய அளவிலான போட்டி மற்றும் சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள வசதியாக இரண்டு லட்ச ரூபாய் மதிப்பிலான SPORTS CYCLE ஐ, தமிழ்நாடு உணவு ஆணைய தலைவர்

இலவசமாக மாற்றுத் திறனாளி மாணவனுக்கு தமிழ்நாடு உணவு ஆணைய தலைவர் சுரேஷ் ராஜன் வழங்கினார்

நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளி பள்ளியான சாந்தி நிலைய முதல்வர் ஜான்சி தாமஸ் சமூக ஆர்வலர் பெ.கபிலன், வடிவை சத்யராஜ், கிழக்கு மாவட்ட பொறியாளர் துணை அமைப்பாளர் அ.சங்கர் அணிஅண்ணாவிளையாட்டு அரங்க நல சங்க செயலாளர் ஷாஜி, வழக்கறிஞர்கள் முருகன், சிவ கோடீஸ்வரன் வட்டக் கழகச் செயலாளர் ரஞ்சன், விமல், ராஜேஷ் முன்னாள் வட்டக் கழகச் செயலாளர் வடக்கு கோணம் ராஜன், அசோகன் மற்றும் சாந்தி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம் தாடிக்கொம்பு பேரூராட்சி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

## ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இராமநாதபுரம் மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


